රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය இணைந்த சேவைகள் பிரிவு COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතනය | ෆැක්ස් | ඊ-මේල් | වෙබ් අඩවිය |
|---|---|---|---|
| தொலைபேசி: (94) 011- 2694560 | தொலைநகல்: (94) 011- 2692254 | மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk | இணைத்தளம்: www.pubad.gov.lk |
| Telephone | Fax | E-mail | Web Site |

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/22/02/01 | ඔබේ අංකය / உமது இல / Your No: | දිනය / திகதி / Date: 2016.04.04 |

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்/
திணைக்களத் தலைவர்களிற்கு

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தை உறுதிப்படுத்தல்</u>**

இல.1774/31 மற்றும் 2012-09-07 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் செய்யப்பட்ட இல.1745/11 மற்றும் 2012-02-14 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமாகிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் அலுவலர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உமது அமைச்சு/திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் (பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களும் உள்ளடங்கலாக) உள்நாட்டு/வெளிநாட்டு பல்கலைக்கழகங்களினூடு பட்டத்தை உறுதிப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கையெடுக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், அப்பெறுபேறுகளை உறுதிப்படுத்துகையில் தனிப்பட்ட ரீதியில் உமது பெயரிற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் வினவிக் கொள்கிறேன்.

அவ்வாறு உம்மால் பெறப்பட்ட பட்டத்தை/பட்டத்தின் பெறுபேறுகளை உறுதி செய்த கடிதத்தின் மூலப்பரதியை, குறித்த அலுவலர்களது நியமனத்தை உறுதிப்படுத்தும் தேவைக்காக எமக்கு அனுப்பி வைக்க வேண்டிய ஆவணங்களுடன், நியமன உறுதிக்கான சிபாரிசுடன் எனக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு அனுப்ப வேண்டிய ஆவணங்கள் தொடர்பான விபரமடங்கிய கடிதம் www.pubad.gov.lk எனும் இவ் அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என அறியத் தருகிறேன்.

ஒப்பம்./கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்